திராவிட மொழிகளின் ஒப்பாய்வு.

1 எண்ணுப்பெயர்கள் பற்றி கட்டுரை வரைக?

முன்னுரை:

பழங்காலந் தொட்டு தற்காலம் வரையிலும் திராவிட மொழியிலும் எண்ணுப் பெயர்கள் எவ்வாறு கூறப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரையால் காண்போம்

எண்ணுப் பெயர்கள்

எண்ணுப் பெயர்கள் வேறு பெயர்களைப் போன்று அதிக மாறுதல்களின்றி திராவிட மொழிகளில் வழங்குகின்றன

இவை சினைப் பெயர்களைப் போன்று உரி வேற்றுமையை ஏற்பதில்லை எண்ணுப் பெயரடைகளைத் தொடர்வதில்லை

இவை அஃறிணை ஒருமைச் சுட்டுப் பெயரோடு இணைந்து வரும் "அன்" சாரியையை ஏற்கின்றன இவை

* எண்ணுமுறைப் பெயர்கள்,
* எண்ணுப் பெயர்கள்

என இருவகைகளாக உள்ளன

எண்ணுமுறைப் பெயர்

ஒன்று, இரண்டு என்ற எண்ணுப் பெயர்களில் "ஆம்" விகுதி இணைந்து ஒன்றாம், இரண்டாம் என்ற எண்ணுமுறைப் பெயர்கள் அமைகின்றன

இவற்றோடு "ஆவது" என்ற விகுதி ஒன்றாவது, இரண்டாவது என்றும் எண்ணுமுறைப்

பெயர்கள் அமைகின்றன

பழங்காலம்:

பழங்காலத்தில் ஒருபான், இருபான் என்ற வடிவங்கள் இருந்தன

திராவிட மொழிகளில் ஓர், ஈர், மூ, நால், ஐ, சார், எழ், எண், பஃ, நூல் என்பன எண்ணுப் பெயர்களின் அடிச்சொற்களாக உள்ளன

மலையாளம்:

தமிழ் மொழியில் "அம்" ஒட்டு இணைப்பது போல மலையாளத்திலும் "அம்" ஒட்டு இணைத்து எண்ணுப் பெயர்கள் அமைக்கப்படுகின்றன

மேலும், மலையாள மொழியில் "அமத்" என்ற ஒட்டு இணைத்தும் எண்ணுப் பெயர்கள் அமைகின்றன

(எ.கா.)

இரண்டாமத்த,

மூணாமத்த

ஒடிய மொழியில் எண்ணுப் பெயர்களை எண்ணுமுறைப் பெயர்களாக மாற்ற "தா" என்பதை இணைப்பர்

(எ.கா.)

Sari - நான்கு

Saritari - நான்காம்

தெலுங்கு 'o' அல்லது 'அவ' என்பதை இணைத்து எண்ணுமுறைப் பெயர் அமைக்கப்படுகிறது

(எ.கா.)

ரெண்டு - ரெண்டோ

ரெண்டவ

கன்னட மொழியில் 'aneya', 'ane' என்ற எண்ணுமைப் பெயர் விகுதிகள் உள்ளன.

(எ.கா.)

ondu – ondaneya
ondane

துளு, கொடகு மொழிகளில் 'ane' என்ற விகுதி உள்ளன

(எ.கா.)

nuji – nujane

குருக் மொழியில் 'ta' என்னும் விகுதியும், பிராகுயி மொழியில் 'imiko' என்னும் விகுதியும் உள்ளன

(எ.கா.)

குருக் – mund – mundata
பிராகுயி – irat – iratimiko

மால்தோ மொழியில் உள்ள எண்ணுமைப் பெயர்கள் அனைத்தும் இந்தி மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டவை ஆகும்.

திராவிட மொழிகளிலுள்ள எண்ணுப் பெயர்களில் only, irantu, muntu, nalku, caintu, catu, elu, entu, ton, pattu என்பவற்றை மூலத் திராவிட வடிவங்களாகக் கொள்ளலாம்.

இனி ஒவ்வொரு எண்ணுப் பெயர்களையும் வரிசையாகக் காண்போம்.

ஒன்று:

ஓர், ஒரு என்பன எண்ணுப் பெயரடைகளாக உள்ளன.

ஒர் என்பது உயிரை முதலாகக் கொண்ட பெயர்களுக்கு முன்னரும், ஒரு என்பது மெய்யை முதல் கொண்ட பெயர்களுக்கு முன்னரும் வருகின்றன.

தெலுங்கு மொழியில் 'ஒக' என்னும் வடிவம் உள்ளது.

துளு மொழியில் 'ஒறி', 'ஒர' என்பன உள்ளன.

இரண்டு:

மலையாளம், கோடா, கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் erodu, radu, eyd, ed போன்ற எண்ணுப் பெயர்கள் உள்ளன.

ஈர், இரு என்பன எண்ணுப் பெயரடைகளாக உள்ளன.

ஈர் என்பது உயிரை முதல் கொண்ட பெயர்களுக்கு முன்னரும், இரு என்பது மெய்யை முதல் கொண்ட பெயர்களுக்கு முன்னரும் வருகின்றன.

மூன்று:

மூன்று என்னும் எண்ணுப் பெயர்க்கு மூன்று, மூட், மூஜு, muji, மூன்ட்ரீ போன்ற வடிவங்கள் மலையாளம், கோடா, தோடா, கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் உள்ளன.

மூன்றி என்ற வடிவமும் அதன் மாற்று வடிவங்களும் துளு, கொலாமி, நாயக்கி, பெங் போன்ற மொழிகளில் உள்ளன.

நான்கு:

நான்கு என்ற எண்ணுப் பெயர்க்கு நாங்கு, நால் போன்ற வடிவங்கள் உள்ளன. துளு மொழியால் நாங்கு என்ற வடிவமும், கோடா மொழியால் நால் என்ற வடிவமும் உள்ளன.

ஐந்து:

ஐந்து என்பதற்கு "ஐந்து" என்று தமிழிலும், அஞ்சு என்று மலையாளத்திலும், அஞ் என்று கோடாவிலும், ஐது என்று கோடாவிலும், ஐது என்று துளு மொழியிலும் காணப்படுகின்றன.

தெலுங்கில் ஐது என்ற வடிவமும் உள்ளது.

ஆறு:

ஆறு என்ற எண்ணுப் பெயரையும், சற்று திரிந்த மாற்று வடிவங்களையும், தமிழ், மலையாளம், கோடா, தோடா, கன்னடம், துளு போன்ற மொழிகளில் காண முடிகின்றது.

கோண்டி, நாயக்கி போன்ற மொழிகளில் sarung, saiigi, sad போன்ற வடிவங்கள் உள்ளன.

ஏழு:

தமிழ், மலையாளம், கன்னடம், துளு போன்ற மொழிகளில் அதிக மாற்றங்கள் இன்றி வருகின்றன.

கோடாவில் ey என்றும், தோடாவில் ow என்றும், கோண்டி மொழியால் ஏயாரு என்ற வடிவமும் உள்ளது.

எழுது, எழுவர் போன்ற சொற்களைக்
இறுதி வரும் எண்ணுப் பெயர்
வடிவங்களும் உள்ளன.

எட்டு:

எட்டு என்ற வடிவம் தமிழிலும், மலையாளத்திலும் திரிபின்றி வருகின்றது.

தெலுங்கு மொழியில் 'எனிமிதி' போன்ற வடிவமும்.

கன்னடத்தில் எண்டு என்ற வடிவமும் உள்ளது.

தோடா, கோட்டு போன்ற மொழிகளில் எதுமதி, தெண்மதி போன்ற வடிவங்கள் உள்ளது.

ஒன்பது:

ஒன்பது என்பதன் மூலத் திராவிட வடிவமாக 'ton', 'tonpatu' ஆகியவை உள்ளன.

திராவிட மொழிகளில் 'ஒகர' உயிரைக் கொண்டு தொடங்கும் எண்ணுப் பெயர்கள், 'தகர' மெய்யைக் கொண்டு தொடங்கும் எண்ணுப் பெயர்கள் என்று இரு மாறு வடிவங்கள் உள்ளன.

ஒம்பது, ஒன்பான், onbad, winboo, tonpatu போன்ற வடிவங்களும் உள்ளன.

டாக்டர். கால்டுவெல், தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பனவற்றில் உள்ள 'தொள்' என்பது 'தொல்' என்பதன் பழைய வடிவத்தின் திரிபாக இருக்கலாம் என்கிறார்.

PAGE NO.
DATE :

பத்து:

பத்து என்னும் பெயர்களாக பஃது, பது, பான், பதின் ஆகியவை உள்ளன.

கோடாவில் 'பொத்' என்றும் 'பொன்றும்' வழங்கப்படுகின்றன.

மேலும், பனி, பதின், பது, வது, பஃது போன்றவை மூலத் திராவிட வடிவங்களாக உள்ளன.

நூறு:

நூறு என்பது திராவிட மொழிகளில் அதிக மாறுதல்களின்றி வருகின்றன.

கோடா, தோடா, நூறு, கொடகு போன்ற மொழிகளில் nur, nur, nur போன்ற வடிவங்கள் உள்ளன.

ஆயிரம்:

cayiram என்பது தென் மூலத் திராவிட வடிவம் ஆகும்.

இது வட மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்ட 'சஹஸ்ர' என்னும் சொல்லின் திரிபாகும்.

(எ.கா)

sahara > ayara

ayara > ayra

ayra > ayram

தெலுங்கில் காணப்படும் வெய, வெயு என்பன திராவிடச் சொற்களன்று தோன்றுகின்றன.

எண்ணும், இவை வேறு மொழிகளில் உடம் பொறாமையான். இவற்றை நோக்கத் திராவிட மொழிக்கு மீட்டுருவாக்கம் செய்வது அரிது

முடிவுரை :

இவ்வாறு திராவிட மொழிகளில் ஒவ்வொரு எண்ணுப் பெயர்களும், ஒவ்வொரு மொழியிலும் வெவ்வேறாக வழங்கப்பட்டு பல வடிவங்களில் வருகின்றன